

Fr. தமியோன்

# தந்தை தமியான்

ஆங்கிலம் :

தெரேசா லோய்டு

தமிழாக்கம் :

முகவை — ஞான. குழந்தைச்சாமி

கத்தோலிக்க சத்தியாபிமான சபை தமிழ்ப் பகுதி

திரு இருதயத் தூதன் காரியாலயம்
பெஸ்கி காலேஜ் — திண்டுக்கல்-3

*Imprimatur :*

✠ J. P. LEONARD S. J.,
*Archiepiscopus Maduraiensis*

தே நொபிலி அச்சகம், மதுரை—1.

# முன்னுரை

உலக வரலாற்றை உற்று நோக்கின் ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகள் கிறிஸ்துவ சமயத் தொண்டர் உலகெங்கும் உலவி ஆற்றிய தொண்டுகள் அழகுற ஒளி வீசி நிற்பதைக் காணலாம்.

வையம் வாழும்வரை, வரலாறு வாழும்வரை அவ்வடி யாரும் வாழ்வர்; அவர்தம் அருஞ்செயல்களும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

மறைக்கும், மக்கட்குமாக பல காலங்களில், பல துறைகளில் பணி புரிந்து பாரினை அணி செய்த அன்ன வருள் ஒருவரின் வரலாறே இவண் பேசப்பெறுகின்றது.

இலண்டன் மாநகரிலுள்ள "Catholic Truth Society" வெளியிட்டுள்ள "The Story of Father Damien" என்ற சிறு நூலின் தமிழாக்கமே இந்நூல். சமயக் கருத்தோடு மட்டுமன்றி, சமரசக் கருத்தோடு நோக்குவார்க்கும் தமியான் அடிகள் வாழ்க்கை உள்ளக் கிளர்ச்சியை உண்டுபண்ணும் என்பதில் ஐயம் இல்லை.

"மக்கட்பணியே மகேசன் பணி" என்ற நம்மவரின் [தமிழரின்] நற்கொள்கைக்கேற்ப நம் இன மக்கள் வாழப் பழகுதல் வேண்டுமெனும் பெரு விருப்போடு, நாளைத் தலைவராம் இன்றை மாணவர்க்கு இதனை அளிப்பதிலே பேருவகை யெய்துகின்றேன்.

முகவை,
2—6—'65

ஞான. குழந்தைச்சாமி

பார்புகழ் பாப்பரசர்

ஆரும் பால் அவர்களுக்கு

**இந்நூல் காணிக்கை**

# பிறப்பும் வளர்ப்பும்

கி. பி. 1840 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் மூன்றும் நாள் பெல்ஜியத்தில் லோவைனுக்கருகிலுள்ள டிரெமெலூ என்ற சிற்றூரில் ஜோசப் தே வெஸ்டர் என்பார் பிறந்தார். அவருடைய பெற்றோர் கடின உழைப்பாளிகள். நல்ல பண்புடையவர்கள். அவர்களுடைய வீடு பண்ணைகளுக்கிடையே அமைந்திருந்த ஒரு சிறு வீடு தான். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நன்னெறியில் பழக்கி கடவுள் பக்தியுள்ளவர்களாக வளர்த்து வந்தார்கள்.

ஜோசப்பின் தாய் மற்றப் பெண்களைப் போலவே உழைப்பாளியாய் இருந்தாள். ஆயினும், தனக்கு ஓய்வு கிடைத்த நேரத்தில் வீட்டிலிருந்த பழையதும், பெரியதுமான ஒரு புத்தகத்திலிருந்து தூயவர்களின் வாழ்க்கைகளைத் தம் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டுவாள். குழந்தைகள் அதைக் கேட்பதில் மிகுந்த ஆவலும், ஆர்வமும் காட்டி, அம்மா திரியான கதைகளை அடிக்கடி தங்களுக்குப் படித்துக் காட்டுமாறு தாயை மகிழ்வோடு கேட்டுக்கொள்வார்கள். அக்கதைகளில் கூறப்படும் தூயவர்கள் கடவுளுக்காகச் செய்த செயல்களையும், பட்ட துன்பங்களையும் பற்றிச் சிந்திப்பதிலும், பேசுவதிலும் அவர்கள் சற்றும் சலிப்புக்கொள்வதில்லை.

தமக்குரிய அனைத்தையும் விட்டு விட்டு கடவுளே கதியென்று தனியிடம் நோக்கிச் சென்று தியானத்திலீடுபட்ட துறவிகளுடையவும், கடவுளுக்காகத் தம் இன்னுயிரை ஈந்த சமயச் சான்றோர்களுடையவும் *வரலாறுகளைப் பெரிதும் விரும்பினர்.

★

# துள்ளித் திரியும் பள்ளிப் பருவம்

ஜோசப்பிற்கு வயது எட்டு. அவன் அண்ணனுக்கு வயது பத்து. இருவரும் பள்ளியில் படித்து வந்தனர். ஒருநாள் இருவரும் வழக்கம்போல பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கையில் வழியில் ஓர் இடத்தை நெருங்கியதும் அவர்களுக்கு என்ன தோன்றியதோ; அவர்கள் பள்ளிக்குச் செல்வதை விட்டுவிட்டு மரங்களடர்ந்திருந்த ஓர் அமைதியான இடத்திற்குச் சென்றார்கள்.

---

* வேதசாட்சிகள்

அங்கு அவர்கள் அந்த நாள் முழுவதையும் கழித்தார்கள். காலை எட்டரை மணியிலிருந்து இரவு ஒன்பது மணிவரை ஒருவரோடொருவர் பேசாமல் முழங்காலிலிருந்து ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

நண்பகல் நேரத்தில் தாங்கள் கொண்டுவந்திருந்த உணவைத் தங்களுக்குள் அமைதியாகப் பங்கிட்டுக் கொண்டனர். கடைசியில் பக்கத்து வீட்டுக்காரரொருவரால் கண்டுபிடிக்கப்பட்டு வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

மறுநாள், பள்ளியில் முன் தினம் வராதது ஏன் என்பதற்குக் காரணம் கூறுவது அவர்களுக்குக் கடினமாக இருந்தது. ஆனால், அவர்களின் தாய் தன் பிள்ளைகள்; தான் கூறிய தூயவர்களின் கதைகளைக் கேட்டு அவ்வழிச் செல்ல முயல்கிறார்கள் என்பதை உணர்ந்தாள். அதிலும் ஜோசப் தூய்மையான ஒரு பெரிய தலைவனாக வருவான் என ஊகித்தாள்.

ஜோசப் சிறுவனாயினும் அச்சிற்றூர் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடித் திரியாமல், அவனுடைய வீட்டைச் சுற்றியுள்ள வயல் வெளிகளில் சுற்றித் திரிந்து செம்மறி ஆடுகளை மேய்த்தலையே பெரிதும் விரும்பினான். செம்மறி ஆடுகளைப் புல்வெளியில் மேய விட்டும், அவற்றின் குட்டிகளோடு விளையாடியும் அவற்றை மகிழ்வித்தான். அதனால் அவ்வூர் மக்கள் அவனை " சிறிய மேய்ப்பன் " என்று அழைத்தனர்.

பள்ளியில் கற்பதில் ஜோசப் கருத்தாக இருந்தான். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள எப்பொழுதும் தயாராக இருந்தான். அமைதியான குணமும், நல்ல உடல் வலிமையும் உடையவனாக இருந்தான். சிறுவனாயினும் அவன் தன் தந்தையுடன் பண்ணையிலும் வேலை செய்வான். கைத்திறமையும், கருத்துத் திறமையும் உடையவனாகவும் இருந்தான். அநேக வழிகளில் தனக்குத் தானே உதவிக் கொண்டான். தன்னால் முடிந்ததைத் தயங்காமல் செய்தான். அன்றியும், அவன் எந்த ஒரு துன்பத்தையும் எளிதாகவும், விரைவாகவும் தீர்க்கும் சிந்தனையுடையவனாக இருந்ததால், தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முடிக்காமல் விடுவதில்லை. அதனால் மக்கள் அவனை விரும்பினர், நம்பினர்.

ஒருசமயம் ஓர் ஏழைப் பெண் வைத்திருந்த பசு நோய்வாய்ப்பட்டது. அது இறந்துவிட்டால் அவளும், அவள் குழந்தைகளும் பட்டினிகிடக்க நேரிடும் என்பதை அறிந்த ஜோசப் ஓர்

இரவு முழுவதும் அப்பசுவோடு இருந்து சிகிட்சைசெய்து அதைக் காப்பாற்றினன்.

இம்மாதிரியான பிறர்சிநேக சேவையில் ஜோசப் வல்லவனாக இருந்தான். குளிர் காலத்தில் ஓடைகளெல்லாம் பனியால் மூடப் பட்டிருக்கும். ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குச் சென்று வேண்டும் பொருளை வாங்கமுடியாமல் மக்கள் தவிப்பர். அப் பொழுது ஜோசப் துணிந்து பனிமீது சென்று அவர்களுக்கு உதவுவான்.

ஞான உபதேசம் படிக்கும் ஒவ்வொரு குழந்தையும் "நீ எதில் அதிகக் கவனமாக இருக்கவேண்டும்; உன்னுடைய உடலைப் பற்றியா? உள்ளத்தைப் பற்றியா?" என்ற வினவிற்கு விடை அறியும். ஆனல் ஜோசப் அதனை அறிந்திருந்ததோடு மட்டுமல் லாது, அதன்படி தன் உள்ளத்தை மிகக் கவனமாகப் பேணியும் வந்தான். உடல் விருப்பத்திற்கு இணங்காமல் ஒறுத்தலை மேற் கொண்டு உள்ளத்தை உடலுக்கு அதிகாரியாக ஆக்கி இருந்தான்.

நாம் நமது உடலைப் பேணவேண்டுவதும் அவசியமே. உட லுக்குத் தேவையான உணவு, உடை, உறக்கம், விளையாட்டு, வேலை இவை அளிக்கப்பட வேண்டும். ஆனல், உடல் விரும்பியவாறெல் லாம் அதற்கு அதிக வசதிகளைச் செய்வோமானல் நாம் உடலை வெகுவாகக் கவனித்தவர்களாகி விடுவோம். அதன்மூலம் உடலை உழைப்பதற்கோ, ஆற்றல் மிக்கச் செயல்களைச் செய்வதற்கோ தகுதியற்றதாகச் செய்துவிடுகின்ருேம். உள்ளத்தை உடலுக்கு அதிகாரியாக்குவதற்குப் பதிலாக உடலை உள்ளத்திற்கு அதிகாரி யாக ஆக்கிவிடுகின்ருேம். எனவேதான் இம்மண்ணில் தோன்றிய நமதாண்டவர், "என்னைப் பின்பற்ற விரும்புகிற எவனும் தனக் குரிய எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவான்" என்று கூறு கின்ருர். (மத். 16-24)

இதன் மூலம் அவர் நமக்கு, மோட்சத்தில் அவருடன் மகிழ்ந் திருக்க நாம் விரும்பினல், இவ்வுலகில் அவரைப்போல் துன்பப்பட வேண்டும் எனப் போதிக்கின்ருர். நமக்கென எதுவும் இல்லை என்று கூறக் கற்றுக்கொள்ளவேண்டும். துன்பம் நம்மைத் தொட ருகின்ற போழ்து அதை மனமுவந்து ஏற்றுக்கொள்ளப் பழகிக் கொள்ளவேண்டும். அவர் நம்மீது கொண்ட அன்பினலல்லவோ துன்ப துயரங்களை அனுபவித்து இறுதியில் மரணத்தை ஏற்றுக் கொண்டார்? நாம் அவரை நேசிப்பது உண்மையானல், அவர்

பட்ட துன்பங்களில் பங்கேற்கவேண்டும். பொறுமையோடும், மகிழ்வோடும் அவரைப் பின்பற்றவேண்டும். கடவுளின் இரக்கத்தினால்தான் நமது உடலை ஆட்சி செய்யும் உயர்வை நம்மால் உள்ளத்திற்கு அளிக்க இயலும். உடல் விருப்பத்திற்கு இணங்காதிருப்பதே சிறந்த பயிற்சியாகும்.

ஜோசப் தன் ஆன்மாவின்மீது அதிகக் கருத்தாய் இருந்தான். இரவில்கூட உடலை வசதியாக உறங்க அனுமதித்தானில்லை. அவன் நீண்டதொரு பலகையை எடுத்து வந்து, அதனைத் தன் படுக்கையின்மேல் போட்டு அதில் படுத்துவந்தான். காலையில் மிகக் கவனமாக அதை எடுத்துப் படுக்கைக்குக் கீழே ஒளித்து வைப்பான். அதனால் ஒருவரும் அதை அறியவில்லை. இவ்வாறு அவன் நீண்ட நாட்களாகச் செய்து வந்தான். இறுதியில் ஒரு நாள் அவன் தாயார் அதைக் கண்டு விட்டாள், அவனைப்போன்ற ஒரு சிறுவனுக்கு வசதியற்ற படுக்கை கூடாது என்பதற்காக, அவ்வாறு செய்யக்கூடாது என்று அவனைக் கடிந்துகொண்டாள். அத்துடன் அப்பலகையும் அப்புறப்படுத்தப் பட்டது. ஆயினும், அவள் தன் மகன் சிறிது காலமாக கடவுளுக்கும், மக்களுக்கும் கடினமாக உழைத்து வருவதை ஓரளவு அறிந்தே இருந்தாள்.

ஒரு குழந்தை தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மிக நல்ல பண்பு. அவர்கள் ஏவும் காரியங்களை மகிழ்வோடும், மன விருப்போடும் செய்து முடிக்கக் கற்றுக்கொள்வது மிகமிக நல்லது. ஏனெனில், பெற்றோரல்லவா குழந்தைகளுக்குத் தேவையானவற்றைச் செய்கிறார்கள். எனவே பெற்றோர் விருப்பத்தைப் பிள்ளைகள் பிடிவாதமின்றியும், பொறுமையோடும் செய்ய வேண்டும். அத்தகைய குழந்தைகளை ஆண்டவர் ஆசீர்வதிப்பார். ஜோசப் தன் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததோடு அவர்களுக்காக இறைவனை வேண்டியும் வந்தான்.

ஜோசப் தான் பெரியவனானதும் எத்தகைய சிறப்பான செயலைச் செய்யப்போகிறோம் என்பதை அறியவில்லை. ஆனால் இறைவன் தன்னிடமிருந்து எதை விரும்புகிறாரோ அதைச் செய்யத் தன் உள்ளத்தைப் பண்படுத்தி வந்தான்.

நல்ல வசதியான படுக்கை இருக்க அந்தப் பலகையை அதன் மீது வைத்துப் படுத்துறங்கியது, வைக்கோலைப் படுக்கையாகக் கொண்டு, பாரச் சிலுவையைச் சுமந்த பரமன் யேசுவைப் பின்பற்றும் கருத்தோடு இயைந்ததாக இருக்கலாம். அதனால் அவன் தாய் அப்பலகையை எடுத்துச் சென்றபோது, அவன் அதற்காக வருந்தி அதைத் திரும்பப் பெற கடவுளை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

★

# வளமிக்க இளமைப் பருவம்.

ஜோசப்பினுடைய அண்ணன் ஆகஸ்ட் குருவானவராக விரும்பினான். அதனை அறிந்த பெற்றோர், தங்கள் ஏழ்மை நிலையையும் மறந்து அவனைக் கடவுளுக்கு அளிக்கத் தயாரானார்கள். அதனால் அவனை அதற்குரிய கல்லூரிக்கு அனுப்பி வைத்தனர். அதே நேரத்தில் ஜோசப்பை ஒரு வியாபாரியாக்க விரும்பி அதற்குரிய கல்விக் கூடத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவன் தன் வேலையில் கருத்தாய் இருந்து நல்ல பயனடைந்தான். விரைவில் ஒரு சிறந்த வியாபாரியாக அவன் விளங்கினான். தன்னை இவ்வளவு தூரம் படிக்க வைத்து முன்னேறச் செய்த தன் ஏழைப் பெற்றோருக்கு நன்றி செலுத்தினான்.

அவனுக்குப் பதினேழு வயதான பொழுது, அவன் ஒரு சமயப் பிரச்சார சபையில் தொடர்ந்து சில உபதேசங்களைக் கேட்க நேர்ந்தது. அவை அவனைச் சிந்திக்க வைத்தன. கடவுள் தன்னை அவருக்கு உழைக்க வேண்டுமென்று விரும்புகிறார் என உணர்ந்தான். ஆகவே, அவன் தான் எதைச் செய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார் என்பதைத் தனக்குக் காட்டுமாறு முன்னிலும் அதிகமாக வேண்டிக் கொண்டான். அது சமயம் வீட்டிலிருந்து அவனுடைய சகோதரி கன்னியர் மடம் புகும் செய்தி வந்தது. தன் பெற்றோர் கடவுளுக்கென்று இரண்டு பிள்ளைகளைக் கொடுத்து விட்ட பிறகு, தன்னையும் அவ்வாறு அனுப்பச் சம்மதிக்க மாட்டார்கள் என்று எண்ணினான். ஆனால், அவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வந்த அவன் பெற்றோர் அவனையும் கடவுள் அழைத்துக்கொள்ள விரும்புகிறார் எனக் கண்டு அவன் அவ்வழிச் செல்வதைத் தடுக்கவில்லை. ஆகையால் ஜோசப் தன் தமையனார் படித்துக் கொண்டிருந்த அதே திரு இருதய சபையில் ("Picpus Fathers") சேர்ந்தான். இப்பொழுது அவனுடைய பெயர் "தமியான்" என மாற்றப்பட்டது.

★

# துறவு வாழ்க்கை

தமியான் வியாபாரத்திற்கென படித்தவராதலால் லத்தீன் மொழியை அவர் கற்கவில்லை. எனவே அவர் தன் தமையனாரைப் போல ஒரு குருத்துவ மாணவராக இருக்கவேண்டியதற்குப் பதி

லாக, அதே சபையின் ஒரு சாதாரண சகோதரராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

அங்கு அவர் சுத்தம் செய்தல்; கழுவுதல், சமையலுக்குத் தேவையானவற்றைச் சேகரித்துக் கொடுத்தல் ஆகிய வேலைகளைச் செய்து வந்தார்! இத்தகைய அலுவல்களைக் கவனிப்பதால் அதன் கடினத்தையோ, இழிவையோ அவர் பொருட்படுத்தவில்லை. அவர் அவற்றைக் கடவுளுக்காகச் செய்தார். ஆம், அங்கு கடவுளின் சீடர்கள்தானே இருந்தனர்! சகோதர சபையார் வெளி வேலைகளையெல்லாம் கவனித்துக்கொண்டதால், குருமட மாணவர்கள் ஜெபிப்பதிலும், படிப்பதிலும், போதிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். சகோதர சபையாருக்குக் கோவிலுக்குச் சென்று அதிக நேரம் ஜெபிக்க முடியாது. ஆனால் அவர்கள் செய்யும் வேலையே ஜெபமாக இருந்தது. ஏனெனில் அவையெல்லாம் கடவுளுக்காகவே செய்யப்படுவனவல்லவா ?

சகோதரர் தமியான் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலை எதுவாயினும் அதைச் செய்வதில் உற்சாகமும், ஊக்கமும் கொண்டிருந்ததோடு, அவற்றை நன் முறையில் செய்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளவும் செய்தார். இவ்வாறு அவர், வீட்டு வேலைகளில் கருத்தைச் செலுத்தியிருக்கும் நேரங்களில், சில சமயம் அவருடைய அண்ணன் அவருக்குச் சில இலத்தீன் சொற்களையும், சொற்றொடர்களையும் படித்துக்காட்டுவார். நாளடைவில் இலத்தீனில் பாடமே கற்றுக்கொடுக்கத் தொடங்கினார். தமியான் அவற்றை மிக விரைவாகக் கற்றுக்கொண்டார். சில மாதங்களில் தமியான் இலத்தீனில் தேர்ச்சி பெற்றாராதலால் குரு மடத் தலைவர் அவரைக் குருத்துவத்திற்குப் படிக்க வைக்கத் தீர்மானித்தார். எனவே தமியான் படிப்பதற்காக பாரிஸ் மாநகருக்கும் பின் லோவைன் நகருக்கும் அனுப்பப்பட்டார். அவர், தாம் கற்றதற்கேற்ப செயல்பட்டார். அவருடைய உள்ளம் நாளுக்கு நாள் வலிமையும், தூய்மையும் பெற்று வந்தது. எப்பொழுதும் அவர் இன்முகத்தோடு காணப்பட்டார். எதற்கும் முந்தி நின்று பெருமைபடுத்திக்கொள்ளாமல் மிக அடக்கமாக இருந்தார். எதைச் செய்யவும் கேட்டுக்கொள்ளப்பட்டால் அதற்கு உடனே கீழ்ப்படிந்து செய்தார். கடவுளின் உதவி தமக்கு இருக்கின்றது என்ற நம்பிக்கையுடன் அமைதியாகவும், ஆழ்ந்த சிந்தனையோடும் எதையும் செய்வார்.

லோவைனில் அவர் இருந்தபோது தூய சவேரியார்மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். இந்துதேசத்தின் அப்போஸ்தல

ராகிய அவருடைய வாழ்வையும், சாவையும் பற்றிச் சிந்திப்பதில் அதிக ஆவல் கொண்டார். தூரகிழக்கு நாடுகளில் மெய்மறை பற்றி அவர் புறச் சமயத்தவரிடையே போதித்த விதத்தையும் அவர் கூர்ந்து நோக்கினார்.

தமியான் நாள்தோறும் தூய சவேரியார் படத்தின் முன் நின்று, தன்னை வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்க அருளுமாறு கடவுளை மன்றாடிப் பெற்றுத்தர வேண்டிக் கொண்டார். அதன் பலன் அவர் எதிர்பார்த்ததற்கும் விரைவாகவே கிட்டியது.

★

# மறைச் சேவை

தமியானுடைய சகோதரராகிய பாப்பிலி அடிகள் [ஆகஸ்ட் என்ற பெயரைக் கொண்டிருந்தவர்] பசிபிக் தீவுகளுக்குக் குருவாகப் போகும்படி கட்டளையிடப்பட்டார். எனவே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவரும் புறப்படத் தயாரானபோது, திடீரென அவர் கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். அதனால் அவர் அங்குச் செல்ல இயலவில்லை. அப்போது தமியான் குருப்பட்டம் பெறவில்லையாயினும் அவர் தன் தமையனுக்குப் பதிலாக அங்குச் செல்ல அனுமதி பெற்றார்.

அவர் அங்குப் பயணமாவதற்குமுன் தன் பெற்றோருக்கு எழுதிய கடிதத்திலிருந்து அவர் மேற்கொண்ட பயணம் பற்றிய அவருடைய சிந்தனைகள் எப்படி இருந்தன என்பதை நம்மால் அறிய முடிகின்றது. அவருடைய இளம் உள்ளத்தில் அவருடைய பெற்றோர், மற்றுமுள்ள குடும்பத்தினர் ஆகியோர் பற்றிய அன்பும், அக்கறையும் நிறைந்திருந்தது. ஆயினும், மறைக்காக அவர், தம் வீட்டையும், நாட்டையும் விட்டு விலகிச் சென்று கொண்டிருந்தார். தனக்கு இவ்வுலகில் பெருஞ்சிறப்பு அளிக்கப்பட்டிருப்பதைத் தெளிவாக உணர்ந்தார். ஆகையால், தான் மேற்கொள்ளவிருக்கும் தனிமை வாழ்வு எத்துணைக் கடினமானதும் துன்பமானதுமாக இருக்கும் என்பதை அறிந்தும் மனம் துணிந்து மகிழ்வோடு சென்றார். மேலும் அத்தகைய கடுமையான வாழ்க்கைக்குத் தன்னைக் கடவுளே அழைக்கின்றார் என்று மிக உறுதியாக நம்பினார். "உலகின் எத்திசையிலும் சென்று பிரசங்கியுங்கள்" [மத். 28-19] என்று தலைவர் ஏசு இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு அதைச் செயல்படுத்த ஆர்வத்துடனும், துணிவுடனும் அவர் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

அந்நாளில் கடலில் செல்ல மரக்கலங்கள் உபயோகப்படுத்தப் பட்டன. அவை இந்நாள் கப்பல்கள்போல் விரைந்து செல்லா. எனவே தமியான் ஐந்து மாதங்கள் கடற் பயணம் செய்யவேண்டிய தாயிற்று. அது சமயம், பசிபிக் பெருங் கடலில் பயங்கரப் புயல் எழுந்து தமியானை வியப்பில் ஆழ்த்தியது. ஏனென்றால் 'பசிபிக்' என்றால் அமைதி என்பது பொருள். ஆகவே அப்பெயரை இயல் பாகவே பெற்றுள்ள அப்பெருங் கடலில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பெயருக்கும் அப்பெருங் கடலுக்கும் பொருத்தமில்லை எனக் கண்டார்.

கடற் பயணத்தில் பூசைக்குரியதைத் தாமே செய்துகொண் டார். ஒருநாள் பூசைக்கு அப்பமில்லாது போயிற்று. உடனே அவர் சிறிது மாவை எடுத்துப் பலமுறை முயன்று அப்பம் செய் வதைக் கண்டுபிடித்தார். இவ்வாறு கடலில் பல அனுபவங்களைப் பெற்ற தமியான் 1864 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள் "கானலூலூ" என்ற இடத்தை வந்தடைந்தார். அந்த ஊர் மக்கள் தமியானை வாழ்த்தி வரவேற்க மலர் மாலைகளோடு கடற் கரை வந்து காத்துக்கிடந்தனர். தமியான் கலம்விட்டிறங்கி வந்ததும் மகிழ்ச்சிக் குரல்களால் வாழ்த்துக் கூறி மலர் மாலைகளை அணிவித்து அழைத்துச் சென்றனர்.

கடலால் சூழப் பெற்ற அத்தீவு வெகு அழகாகக் காட்சியளித் தது. அங்கு வாழ் மக்களுள் சிலர் கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்த வர்களாக இருந்தாலும், அநேகர் கிறிஸ்துவைப்பற்றி அறியாதவர் களாய் இருந்தனர். அவர்கள் கொண்டிருந்த பழமையும், தீயது மான வேதம் கூறுவதன்படி அநேக கெட்டதும், கொடுமையானது மான சடங்குகளைச் செய்து வந்தனர்.

அத்தீவில் பெரும்பாலோர் ஆங்கிலம் பேசுவதைக் கண்ட தமியான் தானும் விரைவில் அம்மொழியைக் கற்றார். தமியான் அத்தீவுக்கு வந்த அதே ஆண்டு குருப்பட்டம் பெற்றார்.

அடுத்து, தமியான் அடிகள் காவாய் தீவின் ஒரு பகுதியாகிய புனுவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு அநேக கிராமங்கள் இருந் தன. அவை ஒன்றிற்கொன்று வெகு தொலைவில் அமைந்திருந்தன. ஆகையால் அடிகள் பணியிலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல மூன்று நாட்கள் தேவைப்பட்டன,

முப்பத்தெட்டு ஆண்டுகளாக அத்தீவுகளில் பிக்பஸ் சபை யார் மறைச் சேவை செய்து வந்தனரேனும், தமியான் அடிகளைத் தவிர வேறு ஒரு குருவும் தொடர்ந்து ஏழு அல்லது எட்டு ஆண்டு

கள் புறுவில் தங்கி இருந்ததில்லை. அங்கு கோவிலுக்கென இரண்டு கட்டிடங்கள் தொடங்கப்பட்டிருந்தனவே யன்றி முழுமையாக ஒரு கோவிலும் இல்லை. அடிகள் அவ்விரு கோவில்களையும் கட்டி முடித்து கோவிலில்லாக் குறையைப் போக்கினார். அன்றியும் அவற்றிற்கு இரண்டு மணிகள் தேவையென்று தன் சகோதரருக்கு எழுதினார். தான் ஐரோப்பாவிலிருந்து வரும்பொழுது தன்னுடன் ஒரு பலி பீடக் கல்லையும் கொண்டு வந்திருந்தார். ஆகையால் கோவில் கட்டி முடியும் வரை அந்தக் கல்லின் மீதே தன் குடிசையிலும், மற்றும் பல இடங்களிலும் பூசை செய்தார். தொடக்கத்திலிருந்தே தன்னால் முடிந்த அளவு உழைத்து வந்தார். தனக்கென எதையும் தேடிக் கொள்ளவில்லை. ஒவ்வோரிடமாகச் சென்று மறைப் போதனை செய்தார். அத்துடன் கல்வியையும் கற்பித்தார். நோயாளிகளைப் பார்வையிட்டார். துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கூறினார். புதிய கோவில்களைக் கட்டினார். பழுதடைந்தவற்றைப் பழுது பார்த்தார்.

அவர் உடல் நலத்துடனும், வலிமையுடனும் இருந்தார். அவர் ஒருபோதும் சோம்பி இருந்ததில்லை. அதற்கு மாறாக அத்தீவுகளின் மக்கள் இயல்பாகவே மிகவும் சோம்பேறிகளாக இருந்தனர். ஆயினும் அயராது உழைக்கும் அடிகளைப் பார்த்துப் பார்த்து அவர்களுள் பலர் ஆர்வத்தால் தூண்டப் பெற்று பல வழிகளிலும் அவரைப் பின்பற்றினார்கள். குறிப்பாக இளைஞர்களுள் அநேகர் மிக நல்லவர்களானார்கள். அதனால் அடிகள் அவர்களைத் தமக்கு உதவ அனுமதித்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எல்லா கிராமங்களுக்கும் செல்வது அவர் ஒருவரால் எப்படி இயலும்? அதனால் அவர், அந்த நல்ல இளைஞர்களுக்கு நன்கு கற்பித்து, தம்மால் செல்ல முடியாத காலங்களில் அவர்களை ஆங்காங்கு அனுப்பி மக்களை ஒன்றுசேர்த்து வழிபாடியற்ற வகை செய்தார்.

இவ்வாறு அவர் கடினமாக உழைத்து வந்தாராயினும், ஒவ்வொரு நாளும் அதிக நேரம் ஜெபிக்கவோ, நோன்பிருக்கவோ தவறவதில்லை. அவர் தன்னைத் தரித்திரராக்கிக் கொள்ள நீண்ட காலமாகப் பயின்று வந்தாராகையால் இப்போது அவர் அதில் வெற்றிகண்டார். தன் முழு சக்தியையும் இறைவனுக்கும் மக்களுக்கும் செலவிட விரும்பினார்.

★

# தொழுநோயாளிகளின் தொடர்பு

ஒருநாள் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்த குருவானவர் ஒருவர் இறந்துவிட்ட செய்தி அவருக்குக் கிடைத்தது. அன்றியும் அங்குள்ள கிறிஸ்தவர்களைக் கவனிக்க வேறு குருவானவர் இல்லை என்றும் கேள்விப்பட்டார். அந்த இடமோ வெகு தொலைவிலுள்ள ஒரு மலையின் மற்றொரு பகுதியில் அமைந்திருந்தது. எனினும் அங்குச் செல்வது என்ற தீர்மானத்திற்கு வந்தார். நெடுந்தொலைவு நடந்து மலையை வந்தடைந்தார் அடிகள். அந்த மலை மிக உயரமாகவும், செங்குத்தாகவும் இருந்தது. அதனால் பற்றி ஏறுவதற்குக் கடினமாக இருந்தது. அதன் உச்சியை வந்தடைந்தபோதுதான் அவர் அதைப் போன்ற செங்குத்தான மற்றொரு மலையையும் கடக்க வேண்டுமென்பதைக் கண்டார். ஏற்கெனவே அவர், களைத்திருந்ததால் மீண்டும் மலையேறுவது அவருக்கு மிகவும் கடினமாக இருந்தது. என்றாலும் தொடர்ந்தார். நீள வசத்தில் பற்றி யேறி உச்சியை அடைந்த அடிகள், அதன் அகலப் பகுதியையும் கடக்க வேண்டியிருந்தது. மாபெரும் துன்பத்தைப் பொறுமையோடு தாங்கி அந்த மூன்றாவது மலையடிவாரத்தை அடைந்த போது, அவர் கைகளும், காலடிகளும் இரத்தத்தைக் கொட்டிக்கொண்டிருந்தனவாதலால் அவர் மிகவும் களைத்துச் சோர்ந்து போனார். என்றாலும், அதை அலட்சியப்படுத்தி, தனக்கு மேலே செங்குத்தாக உயர்ந்து நின்ற அம்மலையை ஏறிட்டு நோக்கி, தனக்குத் தானே "ஜோசப் மேலே போ. நம்முடைய அன்பான கடவுள் தம் மக்களுக்காக எவ்வளவோ இரத்தத்தைச் சிந்தவில்லையா?" என்று கூறி தன், காயம் பட்டு சதை கிழிந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருக்கும் கை, கால்களால் பற்றிப் பற்றி அந்தப் பயங்கரப் பாதையைக் கடந்து மலையுச்சியை அடைந்தார். அங்கிருந்து பார்வையைச் செலுத்திய அடிகள் கண்ணுக்கு அந்தச் சிறிய கிராமம் தெரிந்தது. அக்கிராம மக்கள் அவர் ஒரு குருவானவர் என்றும், அவர் தங்களுக்கு உதவவே வந்துள்ளார் என்றும் அறிந்து மகிழ்ந்து அவருக்கு நன்றி கூறினார்கள். அந்த அன்புள்ள மக்களின் நன்றிச்சொற்களால் அடிகள், தான் பட்ட துன்பமனைத்தையும் மறந்தார்.

அத்தீவுகளில் அநேக அபாய அறிகுறிகள் காணப்பட்டன. சில சமயங்களில் நில நடுக்கம் ஏற்பட்டு அச்சிற்றூரையே அழித்துவிடும். சில சமயங்களில் பயங்கரச் சூறாவளி வீசி அங்குள்ள சிறிய குடிசைகளையெல்லாம் கீழே தள்ளிவிடும். அல்லது கடலிலிருந்து மிகப் பெரிய அலைகள் எழுந்து தீவுக்குள் வலிமையோடு

புகுந்து மக்களை வாரிச் சென்றுவிடும். இத்தகைய பயங்கரமான—அபாயகரமான நேரங்களில் அடிகள் அம்மக்களுக்கு உதவினார்.

இவை மட்டுமின்றி, நோய்களுக்கெல்லாம் மிகப் பயங்கரமான நோயாகிய தொழுநோய் அத்தீவுகளில் உள்ள பலரைத் தொற்றியிருந்தது. அந்நோய் மிகப் பயங்கரமாகப் பற்றிப் பரவியிருந்தது. அதைக் கண்ட அடிகள் மனம் மிக வருந்தியது. வைத்தியத்திற்குக் கட்டுப்படாத அந்நோய் பீடிக்கப்பட்டவர்கள் நாளுக்கு நாள் மிக மோசமான நிலையை அடைந்துகொண்டிருந்தனர். அவர்கள் கை விரல்களும், கால் விரல்களும், மற்றும் உடலின் பல பாகங்களும் அழுகிப்போயிருந்தன. இக்கொடிய நோய் இத்தீவுகளுக்கு முதலில் எப்படி வந்தது என்பதை அறுதியிட்டுக்கூற முடியாதாயினும், பொதுவாக அது ஆசியாவிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாமெனக் கருத இடமிருந்தது. இத்தொழு நோய் விரைந்து பரவி விரைவில் அத்தீவு மக்களனைவரையும் பற்றிக்கொண்டது. ஆனால் அவர்கள் விரைவில் இறந்துவிடவில்லை.

அத்தீவுகளின் மக்கள் அது எத்தகைய கொடிய நோய் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை. அன்றியும் அது எப்படி தங்களுக்குள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகின்றது என்பதையும் அறியவில்லை. அதனால் நீண்ட நாட்களாக அந்நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இறுதியாக 1864-ல் காவாய் அரசாங்கம் அதற்கான நடவடிக்கையிலீடுபட்டது. தொழு நோய் பற்றிய ஒவ்வொருவரும், தீவுகளிலெல்லாம் மிகச் சிறிய தீவாகிய மொலோக்காய் தீவின் வடக்குக் கடற்கரையோரத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்று ஒரு சட்டம் பிறப்பித்தது. ஆனால் அது மக்களால் நிறைவேற்றப்படுவதற்குக் கடினமாக இருந்தது.

ஏனெனில் காவாய் மக்கள் அன்பு உள்ளம் கொண்டவர்கள். நோயாளிகளைத் தனியே அனுப்ப அவர்கள் மனம் இடம் கொடுக்கவில்லை. அதேபோல் நோயாளிகளுக்கும் அத்தீவுக்குச் சென்று தனித்து வாழ விருப்பமில்லை. தன்னால் மற்றவர்களுக்கு ஆபத்து என தனக்குத்தானே உணர்ந்த ஒரு சிலர் வெளியேறினார்கள். எஞ்சியவர்களோ அங்குச் செல்வதைக் காட்டிலும் காடுகளில் சென்று வாழ்தல் நன்றெனக் கருதி அங்குச் சென்று மறைந்துகொண்டனர்.

அத்தீவுகளுக்கு ஒரு புதிய அரசன் ஆட்சிக்கு வந்தபோது, அவன் அச்சட்டத்தை மிகவும் கடுமையாக்கினான். எல்லாத் தொழு

நோய்க்காரரும், அவர்கள் இளைஞராயினும், முதியோராயினும், ஏழையாயினும், பணக்காரராயினும் மேற்குறித்த இடத்திற்குச் சென்றாக வேண்டுமென வற்புறுத்தப்பட்டனர்.

அப்போது உடல் நலமுள்ள அவர்களுடைய உறவினர் தங்களையும் அவர்களுடன் செல்ல அனுமதிக்கக் கேட்டுக்கொண்டனர். ஆனால் அரசு அதற்கு அனுமதிக்கவில்லை. எனவே அவர்கள் தங்கள் அன்பிற்குரிய நோயாளிகளை கலத்திலேற்றி அனுப்பிவிட்டு கரையில் நின்று கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தனர். தந்தை தமியான் அக்கொடிய துன்பம் நிறைந்த காட்சியைக் கண்டு மனம் மிக வருந்தினார். அவர்களுடைய உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே காப்பதற்கும், அவர்களுக்கு உதவுவதற்கும் அவர் பெரிதும் ஆவல் கொண்டார்.

மொலோகாவில் அவர்களது துன்ப துயரங்களுக்கு ஆறுதல் கூற ஒரு குருவானவர்கூட இல்லை. எனவே 1873-ல், அடிகள் தம்மை அங்கு அவர்களைக் கவனிக்க அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். அவருடைய ஆண்டகை அதற்கு இசைந்து அவரை அங்குச் செல்ல அனுமதித்தார். அவர் மொலோகா செல்ல அனுமதிக்கப் பெற்ற அதே நாளில் அவர் தன்னுடைய நண்பர்களது பிரியா விடைக்குக்கூடக் காத்திராமல் பல தொழுநோய்க்காரர்களைக் கொண்ட ஒரு படகில் பயணமானார்.

அடிகள் அத்தீவை அடைந்தபொழுது அது மிகப் பயங்கர நிலையிலிருந்தது! எங்கு நோக்கினும் தொழுநோய்க்காரரின் பயங்கரத் தோற்றம்; அழுகிய புண்களிலிருந்து எழுந்துவரும் கொடிய நாற்றம், அப்பப்ப! துணிவுள்ளங் கொண்ட அடிகளைத் தவிர வேறொருவராக இருந்திருந்தால் நிச்சயம் அஞ்சியிருப்பர். அத்தகைய அருவருக்கத்தக்க சூழ்நிலை. ஏறத்தாழ எண்ணூறு நோயாளிகள் இருந்தனர். அவர்களுள் சிலர் ஆமணக்கு மரத்தின் கிளைகளைக் கொண்டு சாரம் அமைத்து அதன்மேல் கரும்புத் தோகை அல்லது புல் இவற்றால் மூடிய குடிசைகளில் வசித்து வந்தனர். மற்றும் சிலர் அதுவுமின்றி திறந்த வெளியிடங்களில் வசித்தனர்.

தொழுநோய் தொடக்க நிலையிலிருந்தோரும், தொழுநோய் முற்றி மரணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தோருமாகிய இளைஞரும், முதியோரும் சேர்ந்து நெருக்கமாக வறுமையினாலும், வசதிக் குறைவினாலும் மிக வருந்தி வாழ்ந்து வந்தனர்.

கோடைக்காலத்தில் அங்கு நீர் கிடைப்பது அரிதாயிருந்தது. நீண்ட தொலைவு சென்று தண்ணீர் கொண்டுவர வேண்டியிருந்தது. அன்றியும் அவர்கள் உண்பதற்கும், உடுப்பதற்கும்கூட துன்பப்பட்டார்கள்.

தாங்கள் எவ்வளவு பயங்கரமான நிலையிலிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்தே இருந்தனர். தம் எஞ்சிய வாழ்நாட்களை இந்தப் பரிதாபமான இடத்திலேயே கழிக்கவேண்டும் என்பதை எண்ணி, வாழ்க்கையில் எவ்விதப் பற்றும் இல்லாமல் வாழ்ந்தனர். ஒருவித வாழைக் கிழங்கிலிருந்து தாங்களே தயாரித்த மதுவைக் குடித்தும், சீட்டாடியும் அதன் காரணமாகத் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டும் காலத்தைக் கழித்துவந்தனர். அவர்களைக் கவனிக்க யாருமில்லையாதலால் அவர்கள் நோய் மிகமிக மோசமாக வளர்வதாயிற்று.

அடிகள் அத்தீவில் காலடி வைத்ததும் "ஜோசப் இது உன்னுடைய வாழ்க்கையின் வேலை" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார். அவர், தமக்கு முன் என்ன இருக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்தாராயினும், ஒரு கணமும் தாமதிக்காமல் தன் சேவையைத் தொடங்கினார். அநேக வாரங்களாக தனக்கென ஒரு குடிசை கூட அமைத்துக் கொள்ளவில்லை. கோவில் மைதானத்திலுள்ள ஒரு மரத்தடியில் படுத்துறங்கி வந்தார். தனக்கென எதையும் தேடிக்கொள்ளவில்லை. தன்னலமற்ற நேர் வழியில் சென்று கொண்டிருந்தார். தியாகம் என்ற சொல்லின் பொருளை உண்மையாகவே உணர்ந்திருந்தார். எத் துன்பத்தையும், ஏன், மரணத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார். அது அவர் தம் வாழ்வுடன் முடிவதாக—வாழ்வை முடிப்பதாகவே அமைந்தது.

தொடக்கத்திலிருந்தே, அவருடைய பங்கு மக்களிடையே உரை ஆற்றுகின்ற நேரத்தில் "என்னுடைய சகோதரர்களே" என்று வழக்கமாக அழைப்பதற்குப் பதிலாக, "தொழுநோய்க்காரர்களாகிய நாம்" என்றே பேசிவந்தார். இதன் மூலம் தன்னையும் அவர்களுள் ஒருவராக ஆக்கி அவர்கள் மனத்திற்கு ஆறுதல் அளித்தார். ஆனால் அவர் நல்ல உடல் வலிமையோடும், நலத்தோடும் இருந்தார். முதலில் அசுத்தம் நிறைந்த அந்த இடத்தையும், கெட்ட நாற்றத்தையும் பொறுத்துக்கொள்ள அவருக்குக் கடினமாகவே இருந்தது. என்றாலும், அவர் தன்னலமற்ற தன்மையினராதலின் அவற்றைப் பொறுமையோடு சகித்துக்கொண்டார். அவர் எப்பொழுதும் புன்முறுவல் பூத்தவாறு மகிழ்ச்சியாகவே காணப்பட்டார்.

அடிகள் தம் இன் சொல்லாலும், பிறர் சிநேகத்தாலும் நாடு கடத்தப்பெற்ற—சமூகத்தால் வெறுக்கப்பட்ட, அந்த ஏழைகளின் மிகக் கொடிய வேதனைகளை மாற்றி அமைதிகொள்ள வழிசெய்தார். பரிதாபத்திற்குரிய அவர்கள் குடிசை ஒவ்வொன்றுக்கும் சென்று ஆத்ம சாந்திக்காக தேவத்திரவிய அனுமானங்களை அவர்களுக்கு அளித்து வந்தார்.

மேலும், அவர்களது ஏழ்மையையும், இறந்துகொண்டிருக்கும் நிலையையும் கவனித்து அவர்களுக்கு வேண்டும் உதவிகள் செய்தார். அங்கு வைத்தியர் இல்லாமையால் அடிகளே அனைத்துமாக இருந்தார். கிறிஸ்தவர் அல்லாதவர்களில் சிலர், அவர் ஆன்ம காரியங்களைச் செய்வதை வரவேற்கவில்லை. ஆயினும் அடிகள் அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று பாராது தம்மால் முடிந்ததைச் செய்து வந்தாராகையால், அவர்கள் அவரை ஒரு தந்தை என்றே கருதி வந்தார்கள்.

உண்ண உணவின்றி இருந்தவர்களுக்கு உணவும் கொடுத்தார். அவர்கள் புண்களைக் கழுவி மருந்திட்டுக் கட்டுப்போட்டார். அதற்கு அவர் தமக்குக் கிடைத்த மருந்துகளைப் பயன்படுத்தினார். இறந்துபோனவர்களது உடல்களைத் தாமே தோள்களில் சுமந்து சென்றார். சவப் பெட்டிகளைக்கூட அவரே செய்தார்.

மேலும் அவர்களுக்கு உதவ எண்ணி, முதலில் அத்தீவுகளுக்குத் தண்ணீர் தடையின்றிக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைப் பலமுறை கேட்டுக்கொண்டார். இறுதியில் அவர் முயற்சி வென்றது. தாராளமாகத் தண்ணீர் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது. அத்துடன் அவர்கள் குடியிருக்க வீடு வேண்டுமென்று கோரி அதற்கான மரங்களையும் பெற்றார்.

1886-ல் முந்நூறு சிறு வீடுகள் அமைக்கப்பட்டன. அவற்றுள் பெரும்பாலன அடிகளாலும் அந்நோயாளிகளாலுமே கட்டப்பட்டன. மேலும், அரசாங்கத்தை வற்புறுத்தி அந்நோயாளிகளுக்கு உணவும் உடையும் எளிதாகக் கிடைக்க வழி செய்தார்.

இவ்வாறு அந்த ஏழை நோயாளிகள் வாழ வழி செய்த அடிகள் அவர்கள் தங்கள் நோய்க்கொடுமையால் துன்புறுவதை மறக்க ஒரு வழியை மேற்கொண்டார். பலமுள்ள நோயாளிகளைத் தோட்டம் போட்டுக் காய்கறிகள், மலர்கள் ஆகியன உற்பத்தி செய்யத் தூண்டினார். அதனால், உழைப்பில் கவனத்தைச் செலுத்திய அவர்கள் தங்கள் உடல் துன்பத்தை ஓரளவு மறந்தனர். அன்

றியும் அத்தோட்டங்களில் மலர்ந்து மணம் வீசும் பல வண்ண மலர்கள் அவர்களை மகிழ்வுறச் செய்தன.

ஒரு நாள் தொழு நோயாளிகளைக் கவனிக்கவென்று வந்த ஒரு வைத்தியரைக் கண்டு அடிகள் பெருமகிழ்வெய்தினார். தொழு நோயை முற்றிலும் குணப்படுத்த இயலாவிட்டாலும் ஓரளவு அதற்கான மருந்துகளடங்கிய ஒரு சிகிட்சைச்சாலை அமைக்கப் பட்டது.

அடிகள் மொலோகா வந்தபோது ‘கலாவாவ்’ என்னுமிடத்தில் ஒரு கோவில் இருப்பதைக் கண்டார். அவர் அத்தீவுகளுக்கு வந்த சிறிது காலத்திற்குள் அத்தீவுகளின் மற்றொரு பகுதியில் ஒரு கோவிலைக் கட்டினார். மேலும் கலாவாவிலுள்ள கோவிலைப் பெரிது படுத்தினார்.

யேசுநாதரைப் போலவே அடிகளும் குழந்தைகளிடம் சிறப்பான அன்பு கொண்டிருந்தார். அத்தீவுகளில் உள்ள குழந்தைகளும் அவரிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர். அவர்கள் அவரை எங்குக் கண்டாலும் ஓடோடிச் சென்று சூழ்ந்துகொண்டு மகிழ்ச்சிக் கூத்திடுவார்கள்.

முதலில் அடிகளே அக்குழந்தைகளுக்குத் திறந்த வெளியில் கல்வி கற்பித்து வந்தார். பள்ளிகள் கட்டிய பிறகு சில துணிவுள்ள கன்னியர் அதனை மேற்கொண்டனர். தொழுநோய்க் கொடுமைக்குப் பலியான பெற்றோர்களது குழந்தைகள் அநாதை விடுதிகளில் சேர்க்கப்பட்டனர்: அந்தக் குழந்தைகளுக்கு நல்ல பயிற்சியளித்து அவர்களை பூசைக்கு உதவவும், பாடவும் செய்தார்.

படிப்படியாக அவருடைய நடவடிக்கைகளைக் கவனித்து வந்த அத்தீவு மக்கள் அனைவரிடமும் ஒரு புதிய உணர்வு ஏற்படலாயிற்று. தன்னுடைய சொந்த விருப்பத்தை—தனக்குரிய அனைத்தையும் விட்டுவிட்ட, ஏன் தங்களுடன் இறப்பதற்கும் தயாராகிவிட்ட ஒரு பெரிய,— அரிய மனிதர் தங்கள் நடுவில் இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையும் தங்களுக்கு நல்லது செய்துகொண்டிருக்கும் ஒருவரை அவர்கள் கண்டார்கள். அந்த உயர்ந்த மனிதரிடமிருந்து அன்பான நோக்கையும், களங்கமற்ற சிரிப்பையும் அடிக்கடி கேட்டார்கள். அவருடைய தன்னலமற்ற சேவை, எந்நேரமும் மகிழ்ச்சி ததும்பும் முகம்; அடக்கம் இவை அவர்களது உள்ளங்களில் சென்று பாய்ந்து அவர்களைச் சிந்திக்க வைத்தன. அதனால் அவர்கள் மனக்

குறையும் மற்ற துன்பங்களும் படிப்படியாகக் குறைந்தன. அவ நம்பிக்கை பறந்தோட புதிய நம்பிக்கை அவர்களை வந்தடைந்தது. அவர் சொல்லைக்கேட்டு அதன்படி நடந்து வந்தனர். அவரது முன் மாதிரிகையைப் பின்பற்றப் பெரிதும் முயன்றனர். அதில் வெற்றியும் கண்டனர். அவர்கள் தங்கள் பாரமான சிலுவையைச் சுமக்கத் தயாராயினர். அப்படிச் சுமப்பதினால் உள்ளத்தில் ஓர் இன்பம் எழுவதை உணர்ந்தார்கள். சண்டையிட்டுக் கொள்ளுதலும், சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாததுமான தீய பழக்கங்கள் நாளடைவில் மறைந்து, அத்தீவு முழுவதிலும் உள்ள தொழு நோயாளிகளிடையே நல்லுறவும், அமைதியும் நிலவியது. தன்னையும் அவர்களுக்குக் காணிக்கையாக்கி விட்ட அடிகள் தன்னையும் அவர்களைப் போல் ஒரு தொழுநோயாளி என அழைத்துக்கொண்டாலும், தொழுநோயாளிகள் நடுவில் அவர் உடல் நலமுள்ளவராகத் தனித்திருந்தார். வெகு தொலைவிலுள்ள அவருடைய குடும்பத்தினர்களையோ நண்பர்களையோ இனி காண முடியாது என்பதை ஐயமற அறிந்திருந்தார்.

அவர்களிடத்தே கொண்டிருந்த அன்பையும், ஆதரவையும் அத்தீவு மக்களிடத்தில் காட்டி அவர்களுக்கு ஓர் உற்ற நண்பனாக விளங்கினார். அடிக்கடி கோவிலுக்குச் சென்று அவர்களுக்காகச் செபித்தார். துன்பப்படுகிற குழந்தைகள் தங்கள் துன்பம் தீரவும், இன்பம் பெறவும் கடவுளிடத்தில் கேட்க வேண்டுமென போதித்தார்.

இவ்வாறாக அடிகள் பதினொரு ஆண்டுகள் அக்கொடிய நோய்க்கு நடுவில் அயராது உழைத்து வந்தார். அவர் எப்பொழுதும் போலவே உடல் வலிமையுடனும், நலத்துடனும் இருந்து வந்தார். அந்நோய் பற்றிய அச்சமே அவருக்கு இல்லாதிருந்தது.

ஆனால், ஓர் இரவு கடுமையான உழைப்பிற்குப் பிறகு அவர் வீடு திரும்பினார். வழக்கத்திற்கு மாறாக அன்று அதிகக் களைப்பாய் இருப்பதை உணர்ந்தார். எனவே, உடல் களைப்பைப் போக்கிக் கொள்ள, வெந்நீரில் குளிக்கக் கருதினார். அப்படி அவர் சுடுநீரை வைத்துக்கொண்டு குளிக்கத் தயாரானபோது எதிர்பாராத விதமாக அவர் காலில் சுடுநீர் கொட்டிவிட்டது. குளிப்பதற்காக மேலுறைகளைக் கழற்றியிருந்த காலில் சுடுநீர் பட்டும், அடிகளால் சூட்டை உணர முடியவில்லை. அதைக் கண்டு துணுக்குற்றார் அடிகள். ஆவி பறக்கும் அந்நீர் வெறுங்காலில் பட்ட உணர்வு தமக்குத் தோன்றவில்லையென்று அறிந்த மாத்திரத்தில் அவர் தமக்குத் தொழு நோய் பற்றியிருப்பதை உறுதியாக அறிந்தார்.

ஏனெனில் உறுப்புக்கள் உணர்விழப்பதுவே அந்நோய்க்கு முதல் அறிகுறி.

முதலில் அவருடைய துணிந்த மனம்கூட தனக்குத் தொழு நோய் பற்றிக்கொண்டது என்பதை அறிந்து இனி இறக்கும்வரை அனுபவிக்க வேண்டிய கொடிய துன்பங்களை எண்ணிப் பார்த்து நடுங்கியது. என்றாலும் அதே நேரத்தில், தான் நீண்ட காலமாகக் கூறிவந்ததைப்போல் தொழு நோயாளிகளுக்குள் ஒருவராகி விட்டதை எண்ணி மகிழ்ந்தார். ஆம், அவரும் அக்கொடிய நோய்க்கு ஆளாகி விட்டார். இப்பொழுது அவர் ஒரு தொழு நோயாளி. பதினொரு ஆண்டுக்காலம் எந்த நோயைப் பார்த்துப் பார்த்துப் பரிதாபப்பட்டு அதற்குப் பணிவிடை செய்தாரோ அதே நோய் இன்று அவரைப் பற்றிக் கொண்டது. எந்த நோய்த் துன்பத்தை மறக்க நோயாளிகளுக்கு வழி செய்தாரோ, அதே நோயாளியாய் இன்று அவர் மாறிவிட்டார்.

இந்தப் பயங்கர நோய் பற்றிக் கொண்ட பிறகும் அடிகள் மனம் தளரவில்லை. மற்றவர்களுக்குச் செய்யும் பணிவிடைகளில் எவ்விதக் குறைவும் வைக்கவில்லை. தன்னுடைய உழைப்பில், உற்சாகத்தில், முகத்தில், மனத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

கடவுள் தன்னுடைய சிலுவையில் தனக்கும் பங்கு கொடுத்ததற்காக அந்த நல்ல உள்ளம் கடவுளுக்கு நன்றி கூறியது. முன்னிலும் அதிகமாக தலைவர் யேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றினார்.

அந்நோய் மிக மோசமான நிலையை அடைந்திருந்த நேரத்தில் அவர் தன்னுடைய ஆண்டகைக்கு “நான் என் மக்களிடையே மிக மகிழ்வோடு இருக்கிறேன். என்னைத் தூய்மைப்படுத்த மிக நல்ல வழியை அந்த நல்ல கடவுள் அறிந்து அதனை எனக்குக் காட்டியிருக்கிறார்” என எழுதியுள்ளார்.

ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் தொழுநோயால் மிகத் துன்பமடைந்து பலவீனத்திற்குமேல் பலவீனமாகி வந்தாலும், பொறுமையோடும் அமைதியாகவும் தம் அலுவல்களைச் செய்து வந்தார். அப்போது அவர், தம் தமையனுக்கு எழுதிய கடிதமொன்றில் தாமே இவ்வுலகில் மிக மகிழ்வோடு இருக்கும் சபையினன் எனக் கூறுகின்றார்.

கடைசிவரை அவர் தம் கடமைகளைத் தவறாது செய்து வந்தார். அவர் இறந்த அதே ஆண்டில்கூட ஒரு கோவில் கட்டுவதற்கு உதவிக் கொண்டிருந்தார்.

அவர் இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன், தம் நண்பரொருவருக்கு, "என்னுடைய கல்வாரியின் உச்சியை அடைய வேண்டுமெனும் உறுதியில் நான் என்னுடைய சிலுவையின் வழியைச் செம்மைப்படுத்த விரும்புகிறேன்" என்று எழுதியுள்ளார்.

இந்த அன்புத் தந்தையார், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளப் பெருந்தகை, நோயின் கொடுமை தாளாமல் 1889 ஆம், ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் படுக்கையில் வீழ்ந்தார். அப்பொழுதுதான் அத்தீவு மக்களுக்காகப் பல பொருட்களைச் சேர்க்கப் பாடுபட்ட அவர், தனக்கென ஒன்றும்—ஒரு படுக்கை முதற்கொண்டும் தேடிக்கொள்ளவில்லை என்ற உண்மை வெளிப்பட்டது. அவர் எப்பொழுதும் தரையின்மேல் ஒரு துண்டை விரித்து அதில் உறங்கி வந்தார். இறுதி நேரத்தில் அவருக்கு உதவ வந்த குருவானவர் அந்தக் கடைசி நேரத்திலும் அவரை நல்ல படுக்கையில் படுக்கவைப்பது மிகவும் கடினம் எனக் கண்டார்.

இவ்வாறு படுக்கையில் படுத்த அடிகள் அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள், இறைவன் அடி சேர்ந்தார். அவர் இறப்பதற்கு முன்தினம், தன்னைக் கவனிக்க வந்திருந்த குருவானவரிடம் "எனக்கு மரணம் சமீபித்துவிட்டது. அதோ நமது ஆண்டவர் என்னைத் தம்முடன் பாஸ்காவில் பங்குகொள்ள அழைக்கின்றார். ஆகையால் நான் மீண்டும் நமது ஆண்டகையைக் காண விரும்புகிறேன்," என்று கூறினார்.

அடிகள் தாம் விரும்பிய இடமும், முதன்முதலில் அத்தீவிற்கு வந்து தங்கியதுமான ஒரு மரத்தடியில் அடக்கம் செய்யப்பட்டார்.

தந்தை தமியான் யாருக்காகத் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்தாரோ, அவர்களைக் கவனித்துக்கொள்ள இரண்டு குருக்கள் நியமிக்கப்பட்டார்கள். அவரது வைத்தியசாலையைச் சில துணிவுள்ள பிரான்சிஸ் சபைக் கன்னியர் கவனித்தனர். அடிகள் இறந்து நாற்பத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு, பெல்ஜியத்திலுள்ள அவரது இல்லத்திற்கு அவர் உடல் எடுத்துச்செல்லப்பட்டது. அவர் தம் வாழ்நாளில் தனக்குப் புகழ்ச்சியோ, பரிசோ கிடைக்க வேண்டுமென்று விரும்பியதே இல்லை. ஆனால், இப்பொழுதோ அவர் பெயர் உலகமெல்லாம் புகழப்படுகிறது; சிறப்பிக்கப்படுகிறது.

இந்த அதிசய மனிதரின் [illegible] வரும், அவர் விரைவில் கோவிலில் [illegible] படவேண்டுமென ஜெபிக்கக் [illegible] அதாவது "இதுமுதல் ஜோசப் தமியான் [illegible] என அறிவிக்கப்படவேண்டும்.

அவரைப்போலவே நாமும் அவருடைய மிகப் பெரிய [illegible] குணத்தை எண்ணி நமது இதயத்தில் தன்னலமற்ற உணர்ச்சி — ஓர் எழுச்சியை எழுப்பி நம்மனில் நாம் அதை வளர்த்து [illegible] ளுக்கும், அயலவருக்கும் அன்பு காட்டி அவருக்குச் சான்றாகத் திகழ்வோமாக!